தொகுதி-௬௰ :: பகுதி-௩, ௪, Vol. 60 :: No. 3,4

# செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1994
சோபகிருது — ஆனி, ஆடி
1964—JUNE, JULY

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 31—12—64)

தொகுதி - ௬௰ :: பகுதி - ௩, ௪, Vol. 60 :: No. 3,4

# செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1994
சோபகிருது — ஆனி, ஆடி
1964—JUNE, JULY

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 31—12—64)

## உள்ளுறை

1. உள்ளுறையும் இறைச்சியும்,
ஆ. சிவலிங்கனார் 33

2. சிலப்பதிகாரத் திருப்பு மையங்கள்,
ஆர். வீரபத்திரன், எம். ஏ., 38

3. எதிர்காலக் குறியீடு ''உம்/ம்''
மோ. இசரயேல், எம் ஏ. டிப் (செர்மன்) 52

4. கற்றதனாலாய பயன்
''மதுரைக் குமரன்'' 58

5. மதிப்புரை: மு. உலகநாதன்

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர், தமிழவேள் திரு. பி. டி. ராசன்,
B.A., (Bar-at-law) M L. C.

பொறுப்பாசிரியர்கள் :

2. திரு. வீ. சண்முகசுந்தரம், M. A. B. L.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

3. திரு. கி. பழநியப்பன்,
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-1.

4. திரு. இரா. வே. நாராயணன், எம். ஏ,
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-1.

5 பண்டித வித்துவான் மு. உலகநாதன்
விரிவுரையாளர் செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-1.

உ
கடவுள் துணை

# செந்தமிழ்

| | | |
|---|---|---|
| தொகுதி சுய Vol. 60 | திருவள்ளுவர் ஆண்டு 1994 சோபகிருது—ஆனி—ஆடி 1964 June, July | பகுதி 3, 4 No. 3, 4 |


## உள்ளுறையும் இறைச்சியும்

பேராசிரியர், ஆ. சிவலிங்கனர், மயிலம்.

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

வெறிகோள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுதேன் வேட்டும் குறுகும் — நிறைமதுசேர்ந்
துண்டாடுந் தன்முகத்தே சேவ்வி யுடையதோர்
வண்டா மரைபிரிந்த வண்டு.

சுட்டு:

சுட்டுஎன்பது ஒருபொருளைச்சுட்டிப் பிறிதோர் பொருள் படுதல். ஒருபொருளைச் சுட்டுவதாவது கையாலும் கண்ணாலும் தெரிவித்தல். அவற்றால் ஒன்றைத் தெரிவிக்க அதிலிருந்து வேறு கருத்தையறியும்படி இருப்பதே சுட்டு உள்ளுறையாம். சுட்டப்படும் பொருளின் உள்ளே உறைவது சுட்டு உள்ளுறை.

ஒருநாள் பகலில் தலைவியைக் கூட வேண்டித் தலைவன் வந்து கொண்டிருந்தான். பூப்பறிக்க வருவதுபோல் தோழியும் தலைவியை அழைத்துக் கொண்டு குறிப்பிட்ட இடத்

தில் வந்துசேர்ந்தாள். தோழி தலைவன் வருவதைப்பார்த்து விட்டாள். அந்த இடத்தில் தலைவியை நிறுத்திவிட்டுத் தான் போய்விட நினைத்தாள். நினைத்தவள், தலைவியிடம், 'நீயிங்கேயேயிரு; தலைவன் வருகிறுன்' என்று சொல்லி விட்டுப் போக நினைத்தாள். அப்படிச் சொல்லுமுன் தலை வன் வந்துவிடுவான்போலும். அதனுல் குறிப்பாகச் சொல்ல நினைத்தாள். உடனே தன் கைவளையல்களைப் பார்த்தாள்; பின் தன் தோள்களைப் பார்த்தாள், முடிவில் தன் கால்களைப்பார்த்தாள். உடனே அவ்விடம் விட்டு அகன்ருள். தலைவி தனியே நின்ருள். அது கண்ட தலைவன் தோழியின் குறிப்பை உணர்ந்தான். தன் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

"தோடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள்செய் தது" (குறள்: 1279)

என்று சொல்லிக்கொண்டான். தோழி தலைவியைக் குறித்த இடத்திலேயே நிறுத்துவதற்காக அவள் செய்த குறிப்பின் பொருளை உணர்ந்தான் தலைவன். வளையல்களைப்பார்த்தால் வளைகள் கழலும் என்ற குறிப்பும், தோளைப் பார்த்ததால் வளைகள் கழலுவதற்குத் தோள்மெலிவே காரணம் என்ற குறிப்பும், கால்களைப் பார்த்ததால் சற்றுதூரம் நடக்க வேண்டும் என்ற குறிப்பும் இருப்பதாக உணர்ந்தான்.

"தலைவியே! நாம் விரும்பிய இப்பூவினைப் பரிப்பதானுல் சற்று தொலைதூரம் நடந்துபோகவேண்டும்; அதனுல் தலைவனேடு கூடும் கூட்டம் தடைப்படும்; அத்தடைக்கு ஆற்ருமல் தோள மெலியும்; அதனுல் வளைகழலும்; வளைகழலவும் தோள் மெலிய வும் நடக்கும் ஆற்றல் உடையவளாதல்வேண்டும்; அப்படியா னுல் இப்பூப் பறிக்கலாம். அவ்வாற்றல் உனக்கில்லையாதலின் இங்கேயே நில்; நான்போய் வருகிறேன்"

என்று குறிப்பித்தாள்தோழி என உணர்ந்தான். எனவே தோழியின் கண்சுட்டிய கருத்தில், தலைவியைக் குறியிடத்தில் நிறுத்தி உள்ள காரணப்பொருள் உறைதலின் அக்கருத்தமைந்த அக்குறள் சுட்டு உள்ளுறைக்கு உரியது என்னலாம்.

நகை:

நகை உள்ளுறையாவது நகையினுற்பிறிதொரு பொருள் உணரநிற்பது. இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர்த் தோழியிற் கூட்டத்தை விரும்பியதலைவன் ஒருநாள், தோழியும் தலைவியும் தனித்திருக்கும் இடத்திற் சென்றான். தோழி. தலைவியையும் தலைவனையும் மாறிமாறிப் பார்த்து இருவர்க்கும் தொடர்பு உண்டு என்பதைப் புரிந்துகொண்டாள். தன்னிடம் ஊரும் பேரும் கேட்டுப்பேசிய அவனுக்கு நல்ல பதில் கூறாது, அவன் அவ்விடம் விட்டுப் போகும்படியான குறிப்பில் பேசினாள். அது அவனுக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணியது. அதைப் பார்த்த தலைவி மெல்ல நகைத்தாள். அதுகண்ட தலைவன் அந்த நகையின் குறிப்பைத் தெரிந்துகொண்டான்.

> "நான் இவளை அடைவதற்காகத் தோழியிடம் சிலபேசிக் கொண்டிருந்தேன். இத்தோழி என்னை நெருங்க ஒட்டாமல் ஒதுக்கிப் பேசினாள். நான் அதற்கு வருந்தினேன். அதுகண்டு இவள் மெல்ல நகைத்தாள். இதனால் இவள் மனதில் ஓர் நல்ல எண்ணம் இருக்கிறது என்பது தெரிகின்றது ஆதலின், மனமே அமைதி அடைக"

இவ்வாறு தன் மனதுக்குச் சொல்லி அமைதி அடைந்தான். இங்கே தலைவி நகைக்கத் தலைவன் இவள் உள்ளத்தில் ஓர் குறிப்பு உண்டு என உணர்ந்தான் அக்குறிப்பாவது,

"தலைவனே! இத் தோழி உன்னை நெருங்கவிடாமல் ஒதுக்குவதுபோல் பேசினாலும் நம் ஒழுக்கத்தை அறிந்து விட்டமையால் நம்மைச் சேர்த்துவைக்கும் எண்ணத்துடனேயே உன்னிடம் பேசுகிறாள். ஆதலின் மனம் வருந்தவேண்டுவதில்லை"

என்பதாம். இக்குறிப்பே நகையின் உள்ளுறை பொருளாம் இக்குறிப்பு அமைந்தகுறள்

அசையியற் குண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும் (குறள். 1098)

என்பதாம். "என்னைத்தோழி அகற்றுகின்ற சொற்கு ஆற்றாது இரந்து நோக்கியவழி அஃதறிந்து நெகிழ்ந்து உள்ளே நகராநின்றாள், அதனால் நுடங்கும் இயல்புடையாளாகிய தலைவிக்கு அந்நகையில் உறையும் ஓர் நன்மைக்குறிப்பு உண்டாம்" என்பது இதன் பொருள்.

சிறப்பு:

சிறப்பு உள்ளுறை என்பது இதற்குச் சிறந்தது எனக் கூறுவதில் பிறிதோர் பொருள் கொள்ளக்கிடைப்பது.

அழகும் இளமையும் உள்ள ஒருத்தியைப் பார்த்து அவள் கையில் உள்ள குழந்தையைக் காட்டி, 'இக்குழந்தைக்குச் சிறந்த தாய் அல்லளோ நீ' எனச் சொன்னால் குழந்தைக்குத் தாய் சிறந்தவளாகச் சொல்லப்பட்டாள் என்னலாம். இப்படிச் சொல்வதில் ஓர் பொருள் உள்ளே உறைவதையும் நாம் அறியலாம். குழந்தைக்குத் தாய் எனவே, 'அவள் இளமைப் பருவம் விட்டு முதுமைப்பருவத்தையடைந்து விட்டாள்' என்பதே அவ்வுள்ளுறை பொருள் இப்படி வருவனவற்றைச் சிறப்பு உள்ளுறை என்னல் வேண்டும்.

வழக்கத்துக்கு மாருக ஒரு செயல் சிறப்பிக்கப்படு மாஞல் அச்சிறப்பில் ஓர் கருத்து மறைந்து கிடக்கும். அக் கருத்தும் சிறப்பு உள்ளுறையாம்.

வழக்கத்துக்கு மாருக ஒருவன் தன் மனைவியிடம் அன்பு பாராட்டிச் சிறப்பிப்பானேயாஞல் அவன், உடனே பிரிய எண்ணுகிருன் என்பது அச்சிறப்பிலிருந்து தெரிய வரும். இதுவும் சிறப்பு உள்ளுறையேயாம்.

துஞ்சிஞன் என்றசொல் தூங்கிஞன் என்ற பொரு ளுடையதாஞலும் இறந்தான் என்னும் பொருளைத் தரின் அதுவும் சிறப்புள்ளுறையாம். செத்த நிலையைத் தூங்கிய நிலையாகச் சொல்வது சிறப்பிப்பதாம் அச்சிறப்பில் உறை வது செத்த நிலையாம்.

இடக்கர்ச் சொல்லைவிட்டு வேறு சொல்லால் ஒன் றைக்கூறின் அச்சொல் தன் பொருளை விட்டு இடக்கர்ப் பொருளைத் தருதலின் அதுவும் சிறப்பு உள்ளுறை என்க.

சிங்கம் என ஒருவனைச் சிறப்பித்துக் கூறின் சிங்கம் என்ற பொருளை உணர்த்தாமல் அவன் ஆண்மையை யுணர்த்தலின் அதுவும் சிறப்புள்ளுறையே.

கெடுக (அழிக) என்பதற்குப்பதில் 'சிறக்கநின் ஆயுள்' எனக்கூறுவதும் அதுவே இப்படியே சொல்லள வில் பொருள்படாமல் உள்ளுறைப் பொருள்தருவன எல் லாம் சிறப்பு உள்ளுறையில் அடங்கும்.

இதுகாறும்எழுதிய யாவையும் இளம்பூரணர்கருத்துக் கள் ஆகும். இனி நச்சிஞர்க்கினியர் கருத்துக்களைக் காண்போம்

(தொடரும்)

# சிலப்பதிகாரத் திருப்பு மையங்கள்

ஆர். வீரபத்திரன் M. A. தமிழ் விரிவுரையாளர்,
பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.

தமிழிலுள்ள உயர்தர இலக்கியச் செல்வங்களுள் சிலப்பதிகாரம் ஒன்று ஐம்பெருங் காப்பியங்களுள் அதுவே முதன்மையானது. காப்பியத்தின் பண்புகளுடன் நாடகத்தின் இயல்பும் அதன் கண் இணைந்து விளங்குவதால் அதனை நாடகக் காப்பியம் என்று நவில்வர். முன்னாளிலிருந்த பாரதம், அகத்தியம், முறுவல், சயந்தம் முதலிய நாடகத் தமிழ் நூல் பலவும் இறந்தனவாக இன்றளவும் அழியாது எஞ்சியிருப்பது சிலப்பதிகாரம் ஒன்றேயாம். நாடகத்தமிழுடன் இயற்றமிழும், இசைத் தமிழும் அதன் கண் விரவிவருவதால் முத்தமிழ்க் காப்பியம் எனவும் அது சிறப்பிக்கப்படுகிறது.

நாடகமாவது கதை தழுவி வரும் கூத்து என்பர் அடியார்க்கு நல்லார். நடிப்புத்திறன் வல்ல நடிகர்கள் ஒரு கதையில் வரும் பாத்திரங்களின் வேடம் பூண்டு, மக்கள் கண்டும் கேட்டும் மகிழுமாறு அரங்கில் உணர்ச்சியுடன் நடிக்கும் ஒரு கலைத்துறையே நாடகம் எனவே, ஓரிடத்தில் அமர்ந்து கற்பதற்குரிய இயற்றமிழிலிருந்து மன்றில் நடிக்கப்பெறும் நாடக இலக்கியம் அமைப்புமுறையில் பெரிதும் வேறுபட்டிருக்கும்.

நாடகத்தில் அதன் கதையமைப்பு மிகமுக்கியமானது. அதனைக் கூர்ந்து நோக்கினால் அதில் கதை நிகழ்ச்சியின்

தொடக்கமும், அது படிப்படியாக வளர்ந்து சிக்கலுறுவதும், சிக்கல் முறுக்கிக் குழப்பத்தின் உச்ச நிலை எய்துவதும், பின்பு சிக்கல் நெகிழ்ந்து அவிழ்வதும், இறுதியில் இன்பம் துன்பம் ஆகிய சுவைகளில் ஒன்றைப் பயந்து கதை முடிவு பெறுவதும் ஆகிய பலநிலைகள் ஒரு நெறியாக அமைந்து விளங்கக் காணலாம்.

கதையில் சிக்கல் தோன்றுவதற்கு சிற் சில சூழ்ச்சிகள் (Plots) காரணமாக அமைந்து நிற்கும். அவையே கதையின் திருப்பு மையங்களாகவும் பயன்படுகின்றன. சூழ்ச்சிகளைச் சுவைபட அமைத்துக் கதையை உருவாக்குவதில் நாடக ஆசிரியனது புலமை அடங்கியுள்ளது. அச் சூழ்ச்சிகள் முன்புள்ள கதைப்போக்கிற்கு இயந்தனவாயும், பெரும்பாலும் இயற்கை நெறியை ஒட்டியும் அமையவேண்டும். மேலும் கலைஞன் உருவாக்கும் பாத்திரங்களின் பண்புகள் துலங்குவதற்கும் அச்சூழ்ச்சிகள் தக்க வாய்ப்பினை அளித்தல் வேண்டும் இங்ஙனம் நல்ல முறையில் அமைக்கப்படும் சூழ்ச்சிகள் நாடகத்தின் வெற்றிக்கும் அதன் சிறப்புக்கும் காரணமாகின்றன.

சிலப்பதிகாரம் கோவலன், கண்ணகி என்னும் வணிக குலப் பெருமக்களது வரலாற்றை விரித்துக்கூறும் நூல். அவர்களே அக்கதையின் நாயகர்கள், கோவலன் அழகு, கலையுணர்ச்சி, ஆண்மை, வீரம், இரக்கம். ஈகை முதலிய பண்புகள் அமையப்பெற்றவன். ஆதலால் அவனது புகழ் எங்கும் பரவி இருந்தது. "அவனுந்தான், மண்தேய்த்த புகழினன்", என்று இளங்கோ இதனைக் குறிப்பிடுவர் கண்ணகி திருமகளைப் போன்ற அழகும். அருந்ததியைப் போன்ற கற்பும் உடையவள் என ஆசிரியர் அவளை நமக்கு அறிமுகம் செய்கிறார்.

கோவலன், கண்ணகி இவர்கள் திருமணத்தோடு நாடகம் தொடங்குகிறது. அத்திருமணம் தமிழிலக்கிய மரபுக்கு முற்றிலும் மாறுபட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. தமிழர் திருமணத்தைக் களவொழுக்கத்தில் தொடங்கிக் கற்பொழுக்கத்தில் முடிப்பது புலனெறி வழக்கம் ஆகும். அறவொழுக்கத்திற்கு வரம்பு அமைத்த வள்ளுவரும் திருக்குறள் காமத்துப்பாலில் இந் நெறியைத் தழுவி உள்ளார். கல்வியிற் பெரிய கம்பனும் இராமன், சீதை இவரது திருமணத்தை தமிழ் மரபை ஒட்டியே நிகழ்த்திக் காட்டுகிறார். இராமன் வில்லை வளைத்துச் சீதையை மணம் புரியும் முன்பே அவர்கள் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்ளச் செய்கிறான் இத்தகைய களவொழுக்கமோ அதன் பகுதிகளான உள்ளப்புணர்ச்சி, மெய்யுறுபுணர்ச்சி, ஒருவழித் தணத்தல் முதலிய உள்ளக்கிளர்ச்சியைத் தூண்டும் காதல் அனுபவங்களோ எதுவுமின்றிக் கோவலனும் கண்ணகியும் தம் பெற்றோர்களால் மறை விதிப்படி மணம் முடித்து வைக்கப்படுகின்றனர்.

மணம் புரிந்த தம்பதிகள் இணையற்ற இன்ப வாழ்க்கையில் திளைக்கின்றனர். அவர்கள் எழுநிலை மாடத்தின் இடைநிலைக்கண் மயன் இயற்றினாற்போன்ற அமளியிலும், பின்னர், தென்றல் உலாவும் நிலா முற்றத்திலும் சூரியனும் சந்திரனும் ஒருங்கு கூடினாற்போன்று அமர்ந்து காதல் இன்பத்தை நுகர்கின்றனர். கோவலன் தீராக் காதலுடன் கண்ணகியின் நுதல், புருவம், கண், நடை, குரல் முதலியவற்றைச் சிறப்பிக்கின்றான். இறுதியில் அவளை

"மாசறு பொன்னே! வலம் புரிமுத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும் பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!"

என்று அழைத்துத் தன் அன்பின் மிகுதியை உணர்ச்சியுடன் வெளியிடுகின்றான். சில தினங்களுக்குப் பின் கோவலனது தாய் தன் மகனும் மருகியும் தனித்து இல்லறம் நடத்தலைக் காண விரும்பி, நிறைந்த செல்வத்துடனும், ஏவலாளர்களுடனும் அவர்களைத் தனிக் குடியாக அமர்த்துகிறாள். கண்ணகியும் கோவலனும் விருந்தோம்பல் முதலிய அறங்களைப் பேணி இல்லறத்தில் மேம்படுகின்றனர். இவ்வாறு சில ஆண்டுகள் கழிகின்றன.

இங்ஙனம் அமைதியுடன் நிகழ்ந்து வரும் அன்பு வாழ்விலே கவிஞன் ஒரு சூழ்ச்சியைப் புகுத்தி அதன் போக்கைப் புதிய நெறியிலே திருப்பிக் கதைக்கு உணர்ச்சியும், சுவையும் ஊட்ட முயல்கிறான்.

கதையில் சூழ்ச்சியை அமைப்பதற்கு அதில் வரும் முதன்மையான பாத்திரங்களின் குறைகளுள் ஒன்றை ஆசிரியன் கருவியாகப் பயன்படுத்துவது வழக்கம். மனித இயற்கை முறறிலும் நல்லதாகவோ முற்றிலும் தீயதாகவோ இருத்தல் இல்லையன்றோ? எல்லா மனிதர்களிடமும் குணமும் குற்றமும் கலந்திருத்தலே உலக இயற்கை. கோவலனது சிறந்த பண்புகளில் அவனிடமிருந்த கலைஞானம் ஒன்றாகும். கலையை அனுபவிப்பவனாக மட்டுமன்றி படைப்பாற்றல் மிக்க ஒரு கலைச் சிற்பியாகவும் அவன் விளங்கினான். ஆனால், வாழ்க்கையிலே கலைக்குரிய இடத்தை அவன் தெரிந்துகொள்ளவில்லை. கலையின் பயனெல்லாம் வாழ்க்கையை வளம்படுத்துவதே என்ற உண்மையை அவன் அறியாதவனாக இருந்தான். கோவலன் கலைக்கு முதன்மை அளித்தானேயன்றித் தன் வாழ்க்கைக்கு முதலிடம் அளிக்கவில்லை. அதன் பயனாகக் கலை வளர்கிறது; அவன் வாழ்வு சிதைகிறது. மேலும், கலைஞர்களிடம் சாதாரணமாகக் காணப்படும் உணர்ச்சி வேகமும்

அவனிடம் இருந்தது. அவன் மிக எளிதில் உணர்ச்சிக்கு வசமாகி விடும் இயல்பினனாக இருந்தான். உணர்ச்சியுற்ற நிலையில் நிதானமாகச் சிந்தித்லும், செயல் புரிதலும் இயலாதல்லவா? இக்குறைகளே கோவலனது அமைதியான இல்லற வாழ்வு சிதைவதற்கு காரணமாகின்றன.

நாடக ஆசிரியர்கள், நாடகத்தில் பின்னால் வரப்போகும் சூழ்ச்சிக்கு உதவவல்ல ஒரு குறிப்பை அதன் தொடக்கத்தில் கருவாக அமைத்து வைத்தல் இயல்பு. அக்கருவே பின்பு பாத்திரங்களின் சொல் செயல்களாய் உரம்பெற்று வளர்ந்து, சூழ்ச்சியாக உருமாறி, கதைப்போக்கில் மாறுதல்களை விளைக்கும். சிலப்பதிகாரத்தின் தொடக்கத்திலும் அத்தகைய குறிப்பொன்று அமைந்திருப்பது கற்றோர்க்கு உவகையளிப்பதாகும். கோவலனது குணநலன்களை "மண் தேய்த்த புகழினான்" எனக் கூறிய ஆசிரியர் அதன் பின் அந்தக் குறிப்பை அமைக்கிறார்.

" ... ... ... ... மதிமுக மடவார்தம்
பண் தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேள் என்றிசை போக்கிக் காதலார்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன் என்பான் மன்னோ"

என்பது இளங்கோவின் வாக்கு. மதிபோன்ற முகமும், இசையை வென்ற மொழியையுமுடைய பெண்கள் தமது ஆயத்துள் கோவலனைக் கண்கண்ட முருகன் என்று பாராட்டிச் காதற்குறிப்போடு புகழ்கின்றனர் என்பது இதன் கருத்து கோவலனது பற்பல குண இயல்புகளையும் அரையடியில் தொகுத்து "மண் தேய்த்த புகழினான்" என்று சுருங்கக் கூறிய இளங்கோ அவன் பெண்களால் காதலுடன் ஏத்தப்

படுதலை மூன்றரை அடிகளால் கூறுவது ஒரு நோக்கத்தை உட்கொண்டதாகும். மாதர்களால் காதலிக்கப்படுகிற அழகு, கலை ஆர்வம் முதலிய பண்புகளே கோவலனுக்கு ஒரு குறையாக அமைந்து பின்னர் அவனது வாழ்வு சிதைவற்குக் காரணமாகின்றன. அக்குறையைப் பயன்படுத்தியே கவிஞன் நாடகத்தில் சூழச்சியை உருவாக்குகிருன்.

கலைமோகம் கொண்டிருந்த கோவலனது இல்வாழ்வைச் சிதைப்பதற்கு ஒரு கலையரசி தானே தேவை! அதற்காகக் கவிஞன் மாதவி என்னும் ஒரு பாத்திரத்தைத் தேர்ந்து கொண்டு அவளை ஆடல் பாடல் அழகு என்ற மூன்றினும் ஒப்புயர்வற்றவளாகப் படைக்கிருன். மாதவி இளம் பருவத்திலேயே நடனம், இசை ஆகிய கலைகளை முறையாகப் பயின்று சோழ வேந்தன் முன்னிலையில் அரங்கேற்றி அவனுல் தலைக்கோல் என்ற பட்டமும், பச்சை மாலையும், ஆயிரத்தெண் கழஞ்சுப் பொன்னும் பரிசமாகத் தரப்பெறுகிருள். கலைப்பித்துடைய கோவலன் மலரை நாடிச் செல்லும் வண்டு போல கலையரசி மாதவியை நாடி அடைந்தான். மாதரார் காதலிக்கும் அத்திருமகனை மாதவியும் தான் பெற்ற பெரும்பேருக மதித்து, தனது அழகாலும் கலையாலும் அவனை மகிழ்ச்சிக் கடலுள் ஆழ்த்துகிருள். தேனையுண்டு மயங்கிய வண்டு போல மாதவியைக் கைவிடல் அறியாதவனுய் அவளிடமே தங்கி விடுகிருன் கோவலன். இந் நிலையில் அவன் தன் கற்புடைய மனைவி கண்ணகியை மறந்தான். அதனுல் கண்ணகி நீராடாமலும், ஒப்பனை செய்யாமலும், நல்ல ஆடை அணிகளை அணியாமலும் ஆருத்துயரத்துள் ஆழ்ந்து வருந்துகின்ருள்.

கோவலனது பரத்தமை வாழ்வும் தமிழிலக்கியத்திற்குப் புதிதல்ல. அறநூல்களைப் போலன்றி, அகப்பொருள் நூல்கள் பரத்தமையை உடன்படுகின்றன. பரத்தையரைக் காதற் பரத்தையர், காமக் கிழத்தியர். பின்முறை வதுவையர் என்று அகப்பொருள் நூல்கள் வகைப்படுத்தி விளக்கும். தலைவன்

பரத்தையிற் பிரிதலும், அது காரணமாகத் தலைவி ஊடுதலும், பின்னர்த் தலைவன் பலவாயில்களை ஏவித் தலைவியின் ஊடல் தீர்த்துக் கூடுதலும் ஆகிய துறை பற்றி அமைந்த பாடல்கள் தமிழிலக்கியங்களில் மிகுதியாக உள்ளன. பரத்தமையை அங்கீ கரிப்பதற்குத் தொல்காப்பிய உரையாசிரியருள் ஒருவரான பேராசிரியர் கூறும் காரணம் விந்தையானது. வைகலும் பாலே நுகர்வான் இடையே புளிங்காடியையும் நுகர்ந்து அதன் இனிமை அறிந்தாற் போல தலைவியின் நுகர்ச்சி இனிமை அறிதற்குப் புறப் பெண்டிர் மாட்டுத் தலைவன் பிரிகின்றான் என்பர். இதனோடு வேறோர் காரணமும் அவர் கூறுவர். பண்ணும் பாடலும் காட்டி புறப்பெண்டிர் தலைவனைக் காதலித்தால் அவன் எல்லார்க்கும் தலைவனாதலின் அவர்க்கு இன்பம் செய்தலும் அவன் கடனாம் என்பர்.

கோவலன் மாதவியரிடையே தோன்றிய கேண்மை வெறும் பரத்தையுடன் கொண்ட தொடர்பாக அமையவில்லை. மாதவி கணிகையர் குலத்துப் பிறந்தவளாயினும் கற்பொழுக்கத்தில் மேம் பட்டு, பின்முறை வதுவையர்க்குரிய தகுதியோடு விளங்குகிறாள். கோவலன் தன் பெற்றோர்கள் அளித்த வளமிக்க செல்வத்தால் மாதவியுடன் இன்பமாக வாழ்கிறான். கண்ணகியிடமிருந்தும் அவ்வப்பொழுது நகைகளைப் பெற்று வந்து ஆடம்பரமாகச் செலவிடுகின்றான். கோவலன் மாதவி இவர்கள் வாழ்வு ஊடலும் கூடலுமாக இன்ப நிறைவில் கழிகிறது. மாதவியின் ஊடல் நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்பை இளங்கோ வேனிற் காதையில் விளக்குகிறார். அவ் வேளைகளில் கோவலன் மாதவியிடம் வைத்த தீராக் காதலால் அவளுக்குத் தலையளி செய்து ஊடல் தீர்த்து கூடி மகிழ்கிறான். ஊடலின்பத்தைக் கண்ணகியிடம் அனுபவித்தறி யாத கோவலன் மாதவியின் பால் அதனை முற்ற நுகர்ந்து காதற் கடலில் திளைக்கிறான். மாதவியும் கோவலனது அன்பு முழுவ தற்கும் தான் உரிமை பெற்றிருத்தலை எண்ணி இறுமாப்புக் கொண்டிருந்தாள். மாதவிக்கு மணிமேகலை என்னும் குழந்தை பிறக்கிறது. அக்குழந்தையின் மழலை மொழி, குறுநடை முதலிய

வற்ருல் கோவலன் மாதவி இவரது இன்பவாழ்வு மேலும் தழைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய இன்ப வாழ்க்கையையும் கவிஞன் பின்னும் வேருேர் திருப்புமையத்தால் திருப்பி ஓர் ஆபத்தான நெறியிலே செலுத்துகிருன்.

காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரன் பொருட்டு ஆண்டு தோறும் கொண்டாடப்படும் இந்திரவிழா நடைபெறுகிறது. விழா முடிந்த மறுநாள் நகர மாந்தர்கள் மிக்க ஆரவாரத்துடன் கடலாடச் செல்வது வழக்கம். கோவலன் விழா முடிந்தது முதலே மகிழ்ச்சியின்றிக் கவலையுடன் இருக்கிருன். அதன் காரணத்தை மாதவி அறியாள். கோவலனும் தன் மனத்தை வருத்தும் துன்பம் இன்னதென அவளிடம் கூறவில்லை. மாதவி வாச நீரில் குளித்துக் கூந்தலை ஒப்பனை செய்தும், ஆடை அணிகளால் தன்னை அலங்கரித்தும் கோவலனை அணுகி ஊடலும் கூடலும் அளித்து அவனை மகிழ்விக்க முயல்கிருள். ஆயினும் அவன் உள்ளம் களிப்படையவில்லை. கடல் விளையாட்டிற்குச் சென்ருலாவது அவன் மனம் மகிழ்ச்சியுருதா என்று மாதவி எண்ணுகிருள். கோவலனைக் கடல்விழாக் காண்பதற்கு அழைத்தாள் அவனும் மறுத்துரைக்கவில்லை. கோவலன் அத்தரி என்ற விலங்கின் மீதும் மாதவி வண்டியிலும் ஏறிக்கொண்டு அதிகாலையில் கடற்கரைக்குச் சென்றனர். அங்கே தாழை வேலியையுடைய வெண்மணற் பரப்பில், புன்னைமர நிழலில் சித்திரத் திரையால் அமைத்த கூடாரத்துள் ஒரு கட்டிலின் மீது இருவரும் அமர்ந்தனர். அப்பொழுது மாதவி தன் தோழி வசந்தமாலையின் கையிலிருந்த யாழை வாங்கி பண் அமைத்து அதைக் கோவலன் கையில் கொடுத்தாள். கோவலனது மனக்கவலை கலைநுகர்ச்சியால் மாருதா என்பதே மாதவியின் நோக்கமாக இருக்கவேண்டும்.

கோவலன் இரு தினங்களாகக் கவலையுற்றிருப்பதன் காரணத்தை இப்பொழுது அறிய முயல்வோம். இருபத்தெட்டுத் தினங்களாக நடைபெற்ற இந்திர விழாவின் நிகழ்ச்சிகளில் சோழ

நாட்டு நடிகை திலகமான மாதவியின் கலையரங்கு மிக முதன்மை யானது. அவளது நடனம் இசை ஆகிய கலைகளைக் கண்டும் கேட்டும் மகிழ்வதற்காக வெள்ளி மலையில் வித்தியாதர நகரத்தி லிருந்து விஞ்சையர்கள தம் மனைவி மார்களுடன் வந்திருந்தனர். தேவர்களும் மக்கள் கண்களுக்குப் புலப்படாமல் அங்கு வந்து அமர்ந்திருந்தனர். அரசர், அமைச்சர், மக்கள் எல்லோரும் தத்தம் ஆசனங்களிலிருந்து நடனக் காட்சியைக் கண்டு மகிழ்ந் தனர். மாதவியின் நடனமும் இசையும் இணையற்று விளங்கின. முதலில் அவள் திருமால் முதலிய தேவர்களைக் குறித்த தேவ பாணியைப் பாடினாள். பின்னர் சிவபெருமான் ஆடிய கொடு கொட்டி பாண்டரங்கம் என்னும் கூத்துக்கள், மாயோன் ஆடிய அல்லியத் தொகுதி குடக்கூத்து என்பன, முருகன் ஆடிய துடிக் கூத்து, துர்க்கை ஆடிய மரக்கால் கூத்து, திருமால் ஆடிய பாவைக் கூத்து இவை முதலாகப் பதினொரு வகை ஆடல்களையும் அந்தந்தத் தெய்வங்களுக்குரிய அணிகளுடனும் கொள்கை களுடனும் ஆடலுக்கேற்ற பாடல்களுடனும் யாவரும் வியந்து போற்றும் வண்ணம் ஆடினாள். எல்லோரும் அவளது ஆடல், கைவீச்சு, தலையசைவு, கண் இயக்கம் முதலிய கலை நுட்பங்களை விழித்த கண் இமைக்காமல் பார்த்து அவை உணர்த்தும் பொருள் களை அறிந்து சுவைத்தனர். அன்று மாதவியைப் புகழாதார் இல்லை. அம்மாபெரும் கூட்டத்தில் ஒருவனாய்க் கோவலனும் அமர்ந்திருந்தான். அவன் மனம், மட்டும் மகிழ்ச்சியை இழந் திருந்தது. புகார் நகரம் முழுவதும் மாதவியின் கலையின்பத்தைப் பருகிக் களிப்புக் கடலில் திளைக்கும்போது கோவலன் மட்டும் வெறுப்புடன் இருந்தான் அதன் காரணம் யாது?

மாதவியின் கலையரங்கைக் கண்டுகொண்டிருந்த கோவலன் அக்காட்சியினிடையே தன் அறிவு நிறை முதலியவற்றை இழந்து நின்றான். அப்பொழுது அவனுக்குத் தன்னைப் போன்று அக்காட்சியைக் காணும் ஆயிரக்கணக்கான ஆடவரும் தம் உள்ளத்தை மாதவியிடமாகப் பறிகொடுத்திருப்பரே என்ற எண்ணம் உண்டாயிற்று. நடன வேளையில் மாதவியின் கண்

பலர் மீதும் பாய்ந்து செல்வதைக் கண்டு அதனைக் கோவலன் தவருக எண்ணியிருத்தலும் கூடியதே. இவை யாவும் மாதவி தனக்கே உரியள் என்று எ்ண்ணிக்கொண்டிருக்கும் கோவலன் உள்ளத்தில் பொருமையை எழுப்பி அவள் மீது வெறுப்புக் கொள்ளத் தூண்டியது. கோவலன் இதுகாறுமின்றி இப்பொழுது மாதவியைப்பற்றி ஐயுறவு கொள்வதற்கு வேரூர் காரணத்தையும் சிந்தித்தல் தகும். கோவலன் மாதவியுடன் கூடி ஆடம்பரமாக வாழ்ந்து வந்ததாலும், பொருளைப் போற்றி வழங்க அறியாமல் வந்தவர்க்கெல்லாம் வரையாது கொடை மடம்பட்க் கொடுத்தமையாலும் அவனது குன்றனைய பொருட்குவை நாளடைவிலே குறைந்து போயிருந்தது. கண்ணகி இடமிருந்தும் அவள் காற்சிலம்பு நீங்கலாக ஏனைய அணிகள் யாவற்றையும் பெற்று வந்து செலவழித்து விட்டான். இங்ஙனம் செல்வம் குன்றிய நிலை அவனை அறியாமலே ஒரு தாழ்வு மனப்பான்மையை அவனிடம் உண்டுபண்ணியிருந்தது எனக் கருதலாம். அந்த மனப்பாங்கே மாதவியின் ஆடலைப் பிறழ உணர்வதற்கும், கணிகை மாதான காரணத்தால் அவள் உள்ளம் தன்னை விட்டு வேறு செல்வர்களை நாடியுளது என்று தவருக எண்ணுவதற்கும் இடம்கொடுத்திருக்க வேண்டும்.

இவை ஒன்றையும் மாதவி அறியாள். ஆதலால் அவள் தனது அழகு கலை முதலியவற்றுல் கோவலனுக்கு மகிழ்ச்சியூட்ட முயல்கிருள். கோவலனது மனம் அமைதி இழந்திருக்கும் நிலையில் மாதவி புரிகின்ற அன்புச் செயல்கள் யாவும் மாறுன பலனையே விளைக்கின்றன.

யாழைக் கையில் வாங்கிய கோவலன் அதில் ஆற்றுவரி கானல்வரி முதலிய இசைப்பாடல்களைப் பாடினுன் அவன் மனம் மகிழ்ச்சியுடன் இருந்தால் தானே அதிலிருந்து மகிழ்ச்சி தரும் பாடலும் இசையும் பிறக்கும்! துன்புற்ற உள்ளத்திலிருந்து பிறரைத் துன்புறுத்தும் பாடல்களே வெளிவருகின்றன.

கோவலன் பாடிய பாடல்கள் அகப்பொருள் துறைபற்றி அமைந்தவை. ஒரு தலைவன் பெண் ஒருத்தியைக் கண்டு காதலித்து அவள் அழகினை வர்ணிப்பதும், அவனது விருப்பத்திற்கு அவள் இணங்காமையால் அவன் வருந்துவதும் ஆகிய கருத்துக்கள் அவற்றில் அடங்கியுள்ளன. பாடலைக் கேட்ட மாதவி கோவலன் தன்னை வெறுத்து வேறோர் மாதினை நாடுகிறான் என்று தவறாக எண்ணுகிறாள். இரு தினங்களாகக் கோவலன் நடத்தையில் கண்ட மாறுதல்கள் அவளது ஐயத்தை உறுதிப் படுத்தின.

கோவலன் பாடி முடித்ததும் மாதவி அப்பாடல்களில் தனக்கிருக்கும் வெறுப்பை வெளிக்காட்டாமல் மகிழ்ச்சியுற்றவள் போல அவனிடமிருந்த யாழை வாங்கி, ஏட்டிக்குப் போட்டியாக வேறு சில வரிப்பாடல்களைப் பாடினாள். அப்பாடல்களில் ஒரு தலைவி தன்னைக் களவிற் கூடிப் பிரிந்த தலைவனை எண்ணி வருந்துவதும், அன்னை தன் மெலிவைக் கண்டு வினவினால் அவளுக்கு என்ன கூறுவது என அஞ்சுவதும், மாலைப் பொழுதில் வருத்தமுற்ற தலைவி அம்மாலை தலைவன் நாட்டு உளதோ என்று வினவுவதும் ஆகிய கருத்துக்கள் அமைந்துள்ளன. மாதவியின் உள்ளம் தூயதாகி இருந்தும் அவள் பாடிய பாடல்கள் அவள் ஒழுக்கத்தைக் குறித்து முன்பே ஐயுறவு கொண்டிருந்த கோவலனுக்கு அவ் ஐயத்தை மேலும் உறுதிப்படுத்தின. உணர்ச்சியுற்ற நிலையில் சிந்தனையை இழக்கும் இயல்பினனான கோவலன் உடனே எழுந்து மாதவியை விட்டகன்றான் மாதவியும் மிக்க வருத்தத்துடன் வண்டியிலேறித் தன் வீட்டை அடைந்தாள்.

இங்ஙனமாகக் கவிஞன் கோவலன் மாதவியரது பிணிப்புற்ற கையை நெகிழ்த்து அவர்கள் மீண்டும் கூடாத வகையில் பிரித்து விடுகிறான். அவர்கள் அவ்வாறு பிரிவதற்குத் தக்க காரணம் எதுவும் இருக்கவில்லை. அவர்கள் ஒருவரோடொருவர் வைத்திருந்த அன்பில் குறை எதுவும் நேர்ந்ததில்லை. உண்மையில் இருவர் உள்ளங்களிலும் அன்பு தேக்கமுற்றிருக்கின்றது. ஆனால்

தாம் வைக்கும் தலையன்பிற்கேற்ப மற்றவர் தம்மிடம் அன்பு காட்டவில்லையே என்ற குறையுணர்வும் அதனுடன் கூடியுள்ளது. கோவலன் தன் மனக்குறையை வாய்விட்டுச் சொல்லியிருந்தால் மாதவி தக்க சமாதானம் சொல்லி அவனது ஐயத்தை அக்கணமே அகற்றியிருப்பாள். அங்ஙனம் செய்யாமல் மாதவியின் தூய அன்பில் களங்கத்தைக் கற்பித்தது கோவலனது குற்றமேயாம். ஆனால் மாதவி நடந்துகொண்ட முறையும் ஒப்பக்கூடியதாக இல்லை அவள் பொறுமையை மேற்கொள்ள வேண்டிய பெண்பால். கோவலனுடன் பல ஆண்டுகள் வாழ்ந்து அவனது குணத்தின் நிறையையும், குறையையும் நன்கு தெரிந்தவள். அவன் வைத்த அன்புரிமையால் அவனது செல்வம் முழுவதையும் அநுபவித்து அவனிடம் கடப்பாடு கொண்டவள். அன்புடைய காதலன் ஏதோ மனம் பேதுற்றுப் பாடினாலும் அவள் பொறுமையோடிருந்து அவன் உள்ளம் ஆறும் வகையில் அன்பு மொழிகளைப் பேசி இருக்க வேண்டும். அங்ஙனமின்றி உனக்கு நான் இளைத்தவளா என்ற ஆணவத்தினால் கோவலன் மனம் புண்படும்படி அவள் பாடியது எவ்வகையினும் அமைவுடையதன்று. இங்ஙனம் அன்பு கெழுமிய இரு பாத்திரங்கள், அற்பக் காரணத்திற்காக மனம் வேறுபட்டு வாழ்விலே நிலையாகப் பிரிய நேர்ந்தமைக்கு இளங்கோவடிகள் ஊழ்வினை ஒன்றையே காரணமாகக் கூறுவர்.

**... ... ... ... யாழிசை மேல் வைத்து**
**ஊழ்வினை வந்து உருத்ததாகலின்**
**உவவுற்ற திங்கள் முகத்தாளை கவவுக்கை நெகிழ்ந்தனனாய்க்**
**கோவலன் பிரிந்தான் என்கிறார்.**

பின்புள்ள கதை நிகழ்ச்சிகள் நாம் அறிந்தனவே. மாதவியை விட்டுப்பிரிந்த கோவலன் கண்ணகியிடம் வந்து அவள் காற்சிலம்பைப் பெற்று அதை விற்பதற்காக அவளுடன் மதுரைக்குச் செல்கிறான். அங்கே பொற்கொல்லன் சூழ்ச்சியால் கோவலன்

அநியாயமாக கொல்லப்படுகிருன். நாடகம் அவலத்தில் முடிகிறது. அறநெறி பிழைத்த பாண்டியன் அரசு கட்டிலில் விழுந்து இறக்கிருன். கோப்பெருந்தேவியும் உடனுயிர் நீக்கு கிருள். மதுரை தீக்கிரையாகிறது. பதினன்கு நாட்களுக்குப் பின் கண்ணகி வானகம் செல்கிருள். கோவலன் கண்ணகியர்க்கு அடைக்கலம் தந்த இடைக்குல மாதாகிய மாதரி தீப்பாய்கிருள். அவர்களுடன் மதுரைக்கு வழித்துணை வந்த கவுந்தியடிகள் உண்ணுநோன்பிருந்து உயிர் விடுகிருள். கோவலன் தாயும் கண்ணகி தாயும் ஆற்ருமையினுல் ஆவி துறக்கின்றனர். மாதவி புத்த மதத்தைத் தழுவி துறவியாகிருள். கோவலன் கண்ணகி இவரது தந்தைமார்களும் துறவு பூணுகின்றனர்.

திருமணமாகிய மங்கல நிகழ்ச்சியில் தொடங்கிய கதையை நாடக ஆசிரியர் மேல் விவரித்த இரு திருப்பு மையங்களின் மூலம் அதன் போக்கை மாற்றி ஆருத் துயரத்துள் சென்று முடியும்படி அமைத்து விடுகிருர்.

இதைக் கேட்கும்போது நமது உள்ளத்தில் பல ஐயங்கள் தோன்றுகின்றன. சிலப்பதிகாரம் கவிஞன் தன் விருப்பம் போல தொடங்கியும் திருப்பியும் முடித்தும் உருவாக்கிய கற்பனைக் கதையா? அங்ஙனமாயின் சீத்தலை சாத்தனுர் மதுரை நிகழ்ச்சிகளை தாம் நேரில் அறிந்ததாகச் செங்குட்டுவனுக்குக் கூறியதும், அவ் வேந்தன் கண்ணகிக்கு எடுத்த விழாவில் தேவந்தி தெய்வமுற்று இளங்கோவின் துறவு நிகழ்ச்சியைக் கூறியதாக அப்புலவர் பெருமானே பாடியிருப்பதும் பொய்யா? — என்ற கேள்விகள் எழுகின்றன.

இவ் ஐயங்களும் கேள்விகளும் சிலப்பதிகாரத்தின் சிறப்பைக் குறைத்தலன்றி அதனை மேலும் விளக்குவனவாக உள்ளன. ஒரு சில உண்மை நிகழ்ச்சிகளுடன் பற்பல மூலங்களிலிருந்து சிறிது சிறிதாகத் தொகுத்த செய்திகளையும் இணைத்து தம் வளமுடைய கற்பனையால் உருவாக்கிய கதையே சிலப்பதிகாரம் எனக் கருத

இடமுண்டு. அக்கதையையும் உண்மை வரலாறு என்றே கற்பவர்கள் மதிக்கும்படி சிலப்பதிகாரக் காவியத்தை இளங்கோவடிகள் சித்தரித்திருப்பது அக்காவியத்தின் பெருமைக்கும் இளங்கோவின் மேமைக்கும் சான்ருக உள்ளது.

மதிப்புரை :

[பொன்வண்ணத் தந்தாதி (உரையுடன்)
கிடைக்குமிடம் : ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவஸ்தானம்.
திருவிடை மருதூர், பக்கங்கள் 102]

சேரமான் பெருமாள் நாயஞரால் இயற்றப்பட்ட இவ்வந்தாதி நூல் தில்லைக் கனகசபையில் அரங்கேற்றப்பட்டதாகும். ஆதியுலா என்னும் ஞான உலாவினைக் கற்ருர்க்கு நாயஞரின் நல்லதமிழின் நடை இனிது விளங்கும். முதற்பாடல் 'பொன்வண்ணம்' என்று துவங்குவதால் நூலின் பெயரும் பொன்வண்ணத் தந்தாதி எனப்பட்டது. ''பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்'' என்னும் முதற்பாடலின் இனிமையை யாரே புகலவல்லார்? இந்நூலுக்குப் திருவாவடுதுறை ஆதின உயர் பள்ளித் தமிழாசிரியர் பொன். சுப்பிரமணியபிள்ளை அவர்கள் உரை கண்டிருக்கிருர்கள். நூலினைக் கற்று நூலின் பெருமையினையும் உரையின் சிறப்பினையும் உணர்க.

பொறுப்பாசிரியர்.

# எதிர்காலக் குறியீடு "உம்/ம்"

வித்துவான். மோ. இசரயேல், எம். ஏ., டிப் (செர்மன்)
(தமிழ் ஆய்வுத்துறை, சென்னை பல்கலைக் கழகம்)

**காலக்கிளவி :**

தொல்காப்பியனார் காலம் சிறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூவகைத்து எனக் கூறியிருப்பினும் (தொ. சொ. 199, 200) அவற்றைக் காட்டும் குறியீடுகள் (markers) எவை எனக் குறிப்பிட்டு இலர், உரையாசிரியர்கள் அவற்றை வரையறுக்கும் முயற்சியில் ஓரளவு வெற்றிபெற்றுள்ளனர். தொல்காப்பியனார் காலத்தைக் காட்டும் குறியீடுகள் உள என்பதை ஒப்புக்கொள்ளும் வாயிலாக அவற்றைக் "காலக் கிளவி" (தொ. சொ. 207) என்னும் பெயரால் குறிக்கின்றனர். சேனாவரையர் "காலவெழுத்து" என்னும் சொல்லாலும், பவணந்தி முனிவர் "இடைநிலை" (நன். 133, 161—164) என்னும் சொல்லாலும் குறிக்கின்றனர். பகுதி விகுதி ஆகியவற்றிற்கு இடையே தான் பெரும்பாலும் காலங்காட்டும் உறுப்பு அமைந்திருத்தல் கருதி, நன்னூலார் இடைநிலை எனக் குறிப்பிட்டனர்.

**"செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைமுற்றில் காலக்கிளவி',**

கால இடைநிலைகளை வரையறுத்த பவணந்தி முனிவர் ப், வ் (நன். 144) என்பன இரண்டும் எதிர்கால இடைநிலைகள்

எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் காலங் காட்டும் விகுதிகள் சிலவற்றைத் தனியே ஒரு நூற்பாவின் கண் தொகுத்துத் தந்துள்ளார். அங்கு "செய்யும் நிகழ் பெதிர்வும்" (நன். 145) என்கிறார். "செய்யும்" வாய்பாட்டு வினைமுற்று நிகழ்காலத்தில் வழங்கும் (தொ. சொ. 227) என்பது தொல்காப்பியனார் கருத்து. ஆனால் நன்னூலார் அதனை நிகழ்வு, எதிர்வு ஆகிய இரு காலங்களுக்கு உரியதாகக் காட்டுகின்றார். தற்காலத் தமிழில் அது எதிர்காலத்துக்கு மட்டும் உரியதாக வழங்குகின்றது எ-டு அது வரும், அவை வரும். தொல்காப்பியரும் நன்னூலாரும் படர்க்கையில் பலர்பால் ஒழிந்த ஏனைய எல்லாப் பால்களிலும் வழங்கலாம் என விதித்துள்ள போதிலும் (தொ. சொல். 227; நன். 348) இன்று அது பெரும்பாலும் வழங்குவது ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவற்றில் மட்டுமே. சில இடங்களில் பேச்சுத் தமிழில் ஆண், பெண், பலர்பால்களில் வழங்கினும் அது தவறான வழக்கு எனக் கடியப்படுகிறது.

**உம்மின் பொருள் :**

அது எவ்வாறாயினும், "செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைமுற்றுகளின் ஈற்றிலுள்ள விகுதி பால் காட்டுவதில்லை. அது காலங்காட்டும் குறியீடேயாகும். அதன் வடிவம் "உம்" என்பது. அது தொல்காப்பியர் காலத்தில் நிகழ்காலத்தையும், நன்னூலார் காலத்தில் நிகழ் பெதிர்பையும், தற்காலத்தில் எதிர்காலத்தையும் குறித்து வழங்கி உள்ளது என்பதைச் சான்றுகளால் அறிகின்றனம். நன்னூலார் கால இடைநிலைகளை வகுத்த போதிலும் அது மொழி இடைககண் வராமையின், இடைநிலை எனக் கருதிலர்.

**"உம்" எதிர்காலக் குறியீடு :**

தொல்காப்பிய உரையாசிரியர்களில் ஒருவரான தெய்வச்சிலையார் மட்டும் "செய்யும்" என்னும் வாய்ப்பாட்டுச் சொல் எதிர்காலம் குறித்து வராதோ எனின், எதிர்காலத்துக்கண் வருவது கால மயக்கமாகக் கொள்க என விளக்கம் தருகிறார். இதிலுள்ள "உம்" விகுதியைக் குறித்து டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் கருத்து இவண் நோக்கும் தன்மையது. "உம்" என்பது நிகழ்காலம் உணர்த்தும் என்று தொல்காப்பியனார் கூறுவதைவிட, நிகழ்காலமும் எதிர்காலமும் உணர்த்தும் என்று பவணந்தியார் கூறுவது பொருந்தும் அதைவிட, உம் எதிர்காலம் உணர்த்துவது என்றும், சில இடங்களில் மட்டும் நிகழ்காலத்தை உணர்த்தவும் பயன் பட்டது என்று கூறுதல் மிகப்பொருந்தும்." என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.[1] இதுவும், "உம்" எதிர்காலத்தையே பெரும்பாலும் குறித்து வழங்கி வந்துள்ளது என்பதற்குச் சான்றுயுள்ளது.

**உம்மின் பழமை :**

டாக்டர். மு. வரதராசனார் அவர்கள் எதிர்காலங் காட்டும் வ், ப் இரண்டும் உம் என்னும் இடைச்சொல்லின் திரிபே என்றும் கருதுகிறார்.

செய்யும் - ஏன் — செய்யுமேன்
— செய்மேன்
— செய்வேன்
உண்ணும் - ஏன் — உண்ணுமேன்
— உண்மேன்
— உண்பேன்

---

1. டாக்டர். மு. வரதராசனார்,
மொழியியற் கட்டுரைகள் (1954) (பக்கம் 209, 210)

இவ்வாறாக உகரம் கெட்டு மகரம் வகரமாகவும் பகரமாகவும் திரிந்து தற்போதைய வடிவங்களை அடைந்திருக்கலாம் என்பது அவர் கருத்து[2] இந்தக் கருத்தும் "உம்" எதிர்காலங்காட்டும் குறியீடு என்பதை விளக்கி நிற்கிறது.

உம்மின் திரிபு: (உம்>ம்)

இந்த உம் இடைச்சொல் உகரம் கெட்டு மகரம் மட்டும் நிற்றலும் உண்டு. தொல்காப்பியனார் "செய்யும்" என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம் பற்றிக் கூறுங்கால்,

அவற்றுள்,

செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகர
மவ்விட னறித லென்மனார் புலவர்

(தொ. சொ. 238)

என்று குறிப்பிடுகின்றார். இது பற்றிச் சேனாவரையர் தம் உரையில், "செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு ஈற்று மிசை யுகரம் மெய்யொடுங் கெடுமெனவே, செய்யும் என்னும் முற்றுச்சொற்கு ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங்கெடும், மெய் யொழித்துங் கெடும்" என்கிறார்.

எ-டு. மொழிமே (மொழியுமே) (குறு 51) மெய்யொடுங் கெட்டது.

கலுழ்மே (கலுழுமே) மெய்யொழித்துக் கெட்டது.

செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளு ளும்முந் தாகலும் முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே (341)

2. டாக்டர். மு. வரதராசனார்,
மொழியியற் கட்டுரைகள் (பக்கம் 212, 213)

என்று கூறுவதும் அதனை உறுதிப்படுத்தி நிற்கின்றது. எனவே உகரம் கெட்டுத் தனி மகரமே நின்று எதிர் காட்டுதல் இலக்கியங்களில் காணப்படுகிறது என்பது தெளிவு. மகரமே எதிர்காலக் குறியென்றும் உகரம் துணையொலியென்றும் கருதுவதும் தவருகாது.

**உம்மின் பண்டைக்கால வழக்குகள் :**

1. உண்ணும், செய்யும் போல்வன
(தொ. சொ. 227; நன். 348)

2. செய்ம்மன, இசைக்குமன போல்வன
(தொ. சொ. 222)
செய் - ம் - அன் - அ

3. பாயுந்து, பெயர்க்குந்து போல்வன
பாய் - உம் - து

தொல்காப்பியனுர் இதன்கண் உம் இடைச்சொல்லே உந்து ஆகிவிட்டதாகக் கருதுகிருர். (தொ. சொ. 292)

4. என்மர் (பரி. 12) உண்மர் போல்வன
என் - ம் - அர்

5. என்மனுர் (தொல். எழு. 6, 33) போல்வன
என் - ம் - அன் - ஆர்

6. கொய்யுமோன் (புறம். 225) போல்வன
கொய் - உம் - ஓன்

7. கொண்மார், எள்ளுமர் போல்வன
(தொ. சொ. 207; நன். 327)

யாவும் உம்/ம் என்னும் எதிர்காலக் குறியீட்டைப் பெற்று வழங்கியனவேயாகும். உம்/ம் பெற்றுவரும் பெரும்பாலான வழக்குகள் திணைபால் குறியீடு இல்லாமலே சங்ககாலத்தில் காணப்படுகின்றன. ஆகவே அவ்வடிவங்கள் பல பால்களுக்கும் பொதுவாக அமைந்திருந்தன. ஆனுல் சிற்சில இடங்களில்

அவை குறிப்பிட்ட திணைபால் விகுதிகளை ஏற்றுத் தம் வரம்பைக் கட்டுப்படுத்தி உள்ளன. இரண்டு முதல் ஏழு வரை மேற் கொடுக்கப்பட்டிருக்கும் சொல்வகைகள் இத்தகையனவேயாகும்.

இத்தகைய உம்/ம் எதிர்காலங் காட்டுங் குறியீடு திணைபால் விகுதிகளை ஏற்று ஒரோ இடங்களில் வழங்கி உள்ளமை இலக்கண நூலார்க்குப் பெரும் சிக்கலை உண்டாக்கி உள்ளது என்பதை ஆய்வாளர் அறிந்து கொள்ளல் இயலும்.

### ஏவற்பன்மையில் "உம்/ம்":

பின்வரும் சொற்களிலும் உம் அல்லது அதன் உகரம் கெட்ட வடிவம் காணப்படுகிறது. ஆனால் பின்வருவன முன்னிலை மட்டும் வருவன; மேற்கூறப்பட்ட "உம்/ம்" படர்க்கையில் மட்டும் வருவது.

1. கேண்மின் கேள் - ம் - இன் (< என்)
2. கேண்மியா கேள் - ம் - யா
3. மொழிமோ மொழி - ம் - ஓ
4. நின்மே நில் - ம் - ஏ
5. கேளும் கேள் - உம்
6. உள்ளுமோ உள் - உம் - ஓ

"செய்யும்" வாய்ப்பாட்டு வினைமுற்று முன்னிலை, தன்மை ஆகிய இரு இடங்களிலும் வராது என இலக்கண நூலார் (தொ. சொ. 227) கூறி விட்டனர். இப்பொழுது தரம்பட்டிருக்கும் முன்னிலை யில் வரும் உம்/ம் இடைச்சொல்லிலும் எதிர்காலக் குறிப்பு உள்ளதே யாயினும், இவை ஏவற்பொருளுடனேயே எப்பொழு தும் வரும். முன்னர்க் கூறப்பட்ட வினையுருவங்கள் ஏவற் பொருளை தருவதில்லை.

எனவே "உம்/ம்" இரண்டு வகைப்படும் எனலாம்

1. படர்க்கை வினைகளில் எதிர்காலங் குறித்து வருவது.
2. முன்னிலை வினைகளில் பன்மை ஏவலில் வருவது. (இவை ஒருமையில் வழங்குமேயாயினும், அது உயர்வு ஒருமையேயாம்)

# கற்றதனாலாய பயன்

1948 சனவரி 30-ஆம் நாள் இரவு பிரதமர் நேரு வானொலியில் பேசினார். அவர் குரலில் தளர்ச்சியும், நடுக்கமும், துக்கமும், ஏக்கமும் ஒலித்தன.

"நம் வாழ்வின் ஒளி அணைந்து விட்டது. எங்கும் இருள் சூழ்ந்துள்ளது. உங்களுக்கு என்ன சொல்வது எப்படிச் சொல்வது என்பதே எனக்குப் புலப்படவில்லை. நாம் 'பாபு' என அழைக்கும் நமது அன்புக்குரிய தலைவர், — நமது நாட்டின் தந்தை, — மறைந்து விட்டார் ... இனி நாம் அவரைப் பார்க்க முடியாது ..."

இச் சொற்களைக் கேட்ட இந்திய மக்கள் அனைவரும் கதறி அழுதனர். உலகம் துக்கத்தில் ஆழ்ந்தது. அன்று சற்று நேரத்திற்கு முன் மாலை 4-30 மணிக்கு மகாத்மா காந்தி சர்தார் வல்லபாய் பட்டேலுடன் தில்லியுள்ள பிர்லா மாளிகையில் பேசிக் கொண்டிருந்தார். ஏதோ முக்கியமான அரசியல் பேச்சு. அதனால் நேரம் போவதையும் காந்தியார் கவனிக்கவில்லை. அதைக்கண்டு அவர் பேத்திகள் அபூ, மானு ஆகிய இருவருக்கும் பெருங் கவலை தொழுகைக் கூட்டம் தொடங்கும் நேரம் நெருங்கி விட்டது. குறித்த நேரத்தில் வழிபாட்டிற்குச் செல்லவேண்டும் என்பதில் காந்தியார் மிகவும் கண்டிப்பானவர். அந்நேரம் தவறாது அவரைக் கூட்டிச்செல்ல வேண்டியது பேத்திகளின் பொறுப்பு. அபூவிற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. தாத்தாவின் கடிகாரத்தை எடுத்து ஆட்டிக் காண்பித்தாள். காந்தியாரோ அதைப் பார்த்ததாகத் தெரியவில்லை. நல்லவேளையாக அங்கிருந்த சர்தாரின் மகள் அபூவின் சங்கடத்தைத் தெரிந்து கொண்டாள். உடனே குறுகிட்டுப் பேச்சை முடிக்குமாறு செய்தாள்.

"நான் பலவந்தமாகத்தான் பிரிந்து செல்ல வேண்டியிருக்கின்றது" என்று கூறிக்கொண்டே காந்தியார் எழுந்தார். வழிபாட்டிற்குப் புறப்பட ஆயத்தமானார். அச்சமயம் பணியாள் ஒருவன் வந்து, கத்தியவாடிலிருந்து இரண்டு தொழிலாளிகள் பார்க்க வந்திருப்பதாகக் கூறினான்.

அண்ணலார் உள்ளத்தில் என்ன தோன்றியதோ? அவர் அப்பணியாளிடம் கூறிய பதில் இதுவே:

"வழிபாட்டுக் கூட்டம் முடிந்ததும் அவர்களை வரச்சொல். நான் அப்பொழுது உயிருடன் இருந்தால் அவர்களைப் பார்க்கின்றேன்."

இச் சொற்களின் பொருளை அப்பொழுது ஒருவரும் உணரவில்லை, உண்மையாகவே அவர் உயிருடன் திரும்பி மாட்டார் என்று யார் எப்படி நினைக்க முடியும்?

வழக்கம்போல் அபூவும் மானுவும் தம் இரு பக்கங்களிலும் வர, அவர்கள் தோள்களின் மேல் கைகளை வைத்துக்கொண்டு வழிபாட்டுத்திடலை நோக்கி காந்தியார் நடந்து சென்றார். எப்பொழுதும் போல் அன்றும் அவர்களுடன் கேலியாகப் பேசுவதை அவர் மறக்கவில்லை.

அன்று பகல் உணவாகத் தமக்கு சிகப்பு முள்ளங்கியை வேகவைக்காது கொடுத்ததைக் குறிப்பிட்டு" என்க்கு நீ இன்று மாட்டு உணவைத்தானே கொடுத்தாய்?" என்று அபூவைக் கேட்டார்.

"இல்லையே. அதைக் குதிரை உணவு என்றல்லவோ பாட்டி கூறுவது வழக்கம்" என்றாள்.

"ஒருவரும் விரும்பாத வொன்றை நான் எப்படி ருசித்துச் சாப்பிடுகிறேன்! பார்த்தாயா? இது என் பெருமையைக் காட்ட வில்லையா?

"பாபு! உங்கள் கடிகாரத்திற்கு ஒரு கவலை. இப்பொழு தெல்லாம் நீங்கள் அதனிடம் போதுமான அக்கரை காட்டுவ தில்லையாம். நீங்கள் அதைப் பார்க்கவே மாட்டேன் என்கி றீர்கள்" என்று அபூ குற்றம் சாட்டினுள்.

"நான் அதை எதற்காகப் பார்க்கவேண்டும். நீங்கள் தான் எனது மணிகாட்டிகள்."

"அந்த மணிகாட்டிகளைக்கூட நீங்கள் கவனிப்பதில்லை" என்று அபூ கூறியதைக்கேட்டு காந்தியார் சிரித்து விட்டார்.

வழிபாடு நடைபெறும் புல்வெளி நெருங்கி விட்டது. படிக் கட்டுகளில் ஏறும்பொழுது "நான் இன்று பத்து நிமிடங்கள் தாமதமாகச் செல்கின்றேன். இது வெறுக்கத்தக்கதேயாகும். சரியாக ஐந்து அடிக்கும்பொழுது வழிபாடு தொடங்கவேண்டு மென்பது தான் என் விருப்பம் என்ருர் காந்தியார்.

புல்வெளி மேடையை அடைந்ததும் அவர்கள் பேச்சு முற்றுப் பெற்றது. தாத்தாவிற்கும் பேத்திமார்களுக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் இருந்தது. அதாவது வழிபாட்டுத் திடலை அடைந் ததும் ஒருவரும் எத்தகைய பேச்சுக்களும் பேசக்கூடாது; வழி பாட்டைத் தவிர வேறு எதன் மேலும் சிந்தனை செல்லக்கூடாது.

கூட்டத்தினர் காந்தியாரை வணங்கிய வண்ணம் வழிவிட்டு ஒதுங்கி நின்றனர். பேத்திகள் தோள்களிலிருந்து கைகளை எடுத்துக் காந்தியாரும் கூட்டத்தினரைக் கைகூப்பி வணங்கினுர். அச்சமயம் அவருக்கு இடது பக்கம், கூட்டத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. யாரோ ஒருவன் நெருக்கியடித்துக்கொண்டு காந்தி யாரை நோக்கி வந்துகொண்டிருந்தான் தடுத்து நிறுத்துவதற்

காகப் பேத்தி மானு அவன் கையைப் பிடித்தாள். உடனே அவன் முரட்டுத்தனமாக அவள் கையை உதறினான். காந்தியார் முன் வந்தான். கைகளைக் கூப்பினான். வணங்குவதுபோல் குனிந்தான். டும், டும், டும் என அப்பாவி அண்ணலை மூன்று முறை சுட்டுவிட்டான். ''ராம்! ராம்!'' என்ற சொற்கள் காந்தியார் திருவாயிலிருந்து வெளிவந்தன. அவையே அண்ணலாக் கூறிய இறுதிச் சொற்கள். கூட்டத்தினரை வணங்கக் கூப்பிய கைகள் பேத்திகளின் தோள்களில் உயிரற்று விழுந்தன. கால்கள் மடங்கிக் கீழே விழுந்தார். உலகம் இருண்டது இந்தியாவின் தந்தை இறைவனடி சேர்ந்தார்.

அண்ணலின் இறுதிச் சொற்கள் ''ராம்! ராம்!'' எனும் இறைவன் திருப்பெயரேயாகும். தன்னுடைய இறுதி மூச்சுடன் இச்சொற்களே தன் வாயில் வரவேண்டுமென்பதே அவர் விருப்பம். அத்தகைய எண்ணத்தில் தாம் திண்ணமாக மனங் கொண்டிருப்பதை ஓராண்டிற்கு முன்பு காந்தியார் அறிவித்தார்.

1947-ல் இந்தியப் பிரிவினையின் காரணமாக வடநாடெங்கும் வகுப்புக் கலவரங்கள் பயங்கரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன காந்தியார் முகம்மதியர்களுக்கே ஆதரவாக இருக்கின்றார் என்பது பல இந்து தீவிரவாதிகளின் கருத்து. அச்சமயம் அவருக்கு வந்த பல கடிதங்களில் அவரை ''முகமது காந்தியே!'' என்றும் ''ஜின்னாவின் அடிமையே!'' என்றும் குறிக்கப்பட்டிருந்தன. ஒரு நாள் மாலையில் நடைபெற்ற வழிபாட்டுக் கூட்டத்தில் பேசும் பொழுது அவர் அவைகளைக் குறிப்பிட்டார்.

''உலகில் தோன்றிய சமயப் பெரியோர் எல்லோருடைய அருள்மொழிகளையும் நான் நம்புகிறேன். நான் ஆண்டவனை இடைவிடாது வேண்டிக்கொள்வதெல்லாம் இவையே யாகும். என்னைப் புழிப்பவர்களிடமும் நான் சினங்கொள்ளக்கூடாது; யாரேனும் கொலைகாரனின் குண்டுகளுக்கு, ஒரு வேளை நான்

Pyarelal's "Mahatma Gandhi the last Phase" Vol II PP. 101.

இரையாக நேரிட்டாலும், அப்பொழுது என் உதடுகள் இறை வனைத் துதித்த நிலையிலேயே என் உயிர் பிரியவேண்டும்; அப்படி யின்றி அக்கொலைகாரனைக் குறித்த கோபச் சொற்களோ வசைச் சொற்களோ என் வாயில் வெளிப்படுமாயின், என்னை ஒரு வஞ்சகன், பொய்யன் என்று உலகம் குறிப்பிடுவதே எனக்கு ஏற்புடையதாகும். எண்ணியதை எண்ணியவாரே எய்தினர் காந்தியடிகள்; நல்ல எண்ணம்; அதை எண்ணியவரும் திண்ணி யர், வலிமையுடையவர்; ஆகவே எண்ணியதை அவர் அடைய முடிந்தது. எண்ணுகின்றவர்கள் திண்ணமுடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணிய எதையும் பெறலாம் என்பது திருவள்ளுவர் கருத்து :

"எண்ணிய எண்ணியாங் கெய்துப! எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்" (குறள் 666)

உடலை விட்டு உயிர் நீங்கும் இறுதி வேளையில் ஆண்டவனை எண்ணித் துதித்தல் ஒரு அரிய செயலாகும். அதுவும் எதிர் பாராத வகையில் திடீரென்று உயிர் நீங்கும்பொழுது இறைவன் பெயரைக் கூறித் துதிப்பது எளிதில் எல்லோராலும் செய்யக்கூடிய தல்ல. "ஐயோ! உயிர் போகப் போகின்றதே!" என்ற எண்ணந்தான் மனதில் நிற்கும். அடுத்து தன் அன்பிற்குரிய வர்கள் நினைவும், தான் விட்டுச் செல்லும் பொருளின் நினைவுமே தோன்றும் பல ஆண்டுகளாக மனதைப் பக்குவப்படுத்தியவர் களுக்கே இறுதி வேளையில் இறைவனை எண்ணும் எண்ணம் தோன்றும் அத்தகைய பக்குவம் அடைவதற்கு எளிய வழி தின வழிபாடேயாகும் எனக் காந்தியார் கண்டார். அதைப் பின்பற்றி இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்' என்று கூறிய மாணிக்கவாசகப் பெருமானின் மனநிலையை அண்ணல் காந்தியார் அடைந்தார். அவ்வாறு இடைவிடாது இறைவனை சிந்திப் பவர்கள் வீட்டுலகின்கண் நீடுவாழ்வார்களென்றும் அவர்களுக்குப் பிறவி என்ற துன்பம் இல்லையென்றும் வள்ளுவப் பெருந்தகையார் தம் பொய்யா மொழியில் கூறுகின்றார்;

"மலர்மிசை யேகினான் மாணடிசேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" (குறள் 2)

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில (குறள் 3)

இறைவன் அடி சேர்தல் என்றால் இறைவனை இடைவிடாது நினைத்தல் என்பது பொருள். அவ்வாறு நினையாதவர்கள் பிறவி யாகிய பெருங்கடலைக் கடக்க முடியாது.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார் (குறள் 10)

பிறவி ஓர் எல்லையற்ற பெருங்கடல். புல்லாய், பூண்டாய், புழுவாய், மரமாகிப், பல் விருகமாகிப், பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்லசுரராகி, முனிவராய்த், தேவராய் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தல் பிறவிக் கடலின் ஒரு பகுதி என்பது மணிவாசகரின் விளக்கம். இறைவனை இடைவிடாது சிந்திப்பதின் மூலமே இப்பெருங்கடலைக் கடந்து பிறப்பற்ற தன்மையை ஒருவன் அடைய முடியும். இவ்வுண்மையை காந்தி அடிகளார் உணர்ந்தார். உயிருக்குத் துணையாக நிற்பது இறைவழிபாடு ஒன்றே என்று உறுதியாக நம்பினார். அதனால் வழிபாட்டைத் தன் உயிரினும் மேலாகக் கருதினார். "உண வில்லாமல் இருந்தாலும் இருப்பேன் இறைவனை நினையாது ஒரு வினாடியும் இருக்க மாட்டேன்" என்றார்.

"உண்ணா திருப்பினும் உய்வேன் உய்யேனே
எண்ணா திறைவனை ஈங்கு"

வழிபாட்டின் மூலம் பிறவியின் வழியை அடைத்த அண்ணலார் ஆய்ந்தாய்ந்து கண்ட பொய்யாமொழிகள் சிலவற்றைக் காண்போம்;

''ஆண்டவனின் அருள் இல்லையென்றால் உள்ளத்திற்கு அமைதியில்லை; வழிபாடு இல்லையென்றால் ஆண்டவன் அருளு மில்லை; ஆகவே மன அமைதி வேண்டுபவர்கள் இறைவனை வழிபடவேண்டும்.''

''வயது முதிர்ந்தவர்களின் பொழுது போக்கிற்காக இறை வழிபாடு ஏற்பட்டதல்ல. சரியான முறையில் அதை உணர்ந்து பயன்படுத்துவோமாகில் நமது செய்கைகள் அனைத்திற்கும் அது அடிப்படைச் சக்தியாய் விளங்குவதை உணரலாம். ஆண்டவ னிடத்தில் முழு நம்பிக்கை வேண்டும். இது வழிபாட்டிற்கு இன்றியமையாதது.''

'மனப்பூர்வமான வழிபாட்டினால் ஒருவனுடைய உடல் நிதானமடையும், மனதில் அடக்கம் தோன்றும், அடுத்து என்ன செய்யவேண்டுமென்பதை அறியும் சக்தியும் அவனுக்குத் தோன்றும்.'

''வாழ்க்கையில் எதை மறந்தாலும் வழிபாட்டை மட்டும் மறக்கக்கூடாது. ஏனெனில், ஆண்டவனுக்கும் நமக்குமுள்ள தொடர்பு அதுவேயாகும். மனித உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் ஆற்றல் வழிபாட்டிற்கு உண்டு. புறத்தூய்மை நீரினால் அமையும்; அது இல்லையாயின் உடல் நோயால் பாதிக்கப்படும்; அகத் தூய்மை வழிபாட்டால் அமையும், அது இல்லையாயின் உள்ளம் பாதிக்கப்படும்''

''வாயினால் மட்டும் ஓதுவது வழிபாடு ஆகாது. ஓதும் ஒவ்வொரு சொல்லும் எண்ணமும் உள்ளங் கசிந்து உருகிப் பொங்கி வரவேண்டும்''

வழிபாடு மனப்பூர்வமானதுதானா என்பதை எளிதில் தெரிந்து கொள்ளலாம். வழிபடுவோரின் எண்ணமும், சொல்லும், செயலும் தீமைகள் அற்றனவாக இருப்பின் அவர் மனப்பூர்வமாக வழிபடு

கின்றார் என்று கொள்ளலாம். மனம் வாக்கு மெய் மூன்றையும் தீமைகளிலிருந்து காக்கக்கூடியது வழிபாடு ஒன்றேயாகும். எடுத்தவுடனேயே வழிபாட்டின் மூலம் வெற்றி கிடைத்துவிடாது. மிகவும் பாடுபட வேண்டும். நம்மை நாமே எதிர்த்துப் போராட வேண்டும். அவநம்பிக்கை என்பதே முதல் எதிரியாகும். நிலையற்ற மனதை வலிந்து அடக்கவேண்டும். அதில் சிறுகச் சிறுகத் தான் முன்னேற முடியும். ஆகவே அளவற்ற பொறுமையுடன் இருக்கவேண்டும். சிலசமயம் தெளிவில்லாமை, ஏமாற்றம் முதலியன தோன்றலாம். அதைக்கண்டு கோழைத்தனமாகப் பணிந்துவிடக்கூடாது. வழிபாட்டில் திடமான நம்பிக்கை இருப்பின் அதைக் கைவிடும் எண்ணம் ஒருபொழுதும் தோன்றாது. தீமைகளில் கோழைத்தனமே மிகக் கொடியதாகும்; கொலைச் செயலிலும் அது கொடிது. ஆண்டவன் ஆற்றலில் நம்பிக்கை யற்றவர்களே கோழைகளாக இருப்பர், அதனால் ஒருவனிடத்தி லுள்ள கோழைத்தனத்தை இறை வழிபாட்டின் மூலமே நீக்க முடியும்.

"வழிபாட்டின் சக்தியை உணர்ந்தவர்கள், தொடர்ந்து பல நாட்கள் உணவு அருந்தாமல் இருந்தாலும் இருந்து விடுவார்கள். ஆனால் வழிபாடு இல்லாமல் ஒரு வினாடிகூட அவர்களால் இருக்க முடியாது." இது என்னுடையவும் என்னைச் சேர்ந்தவர்களுடைய வும் அனுபவமாகும்.''

நாள் முழுவதும் இறை வழிபாட்டிலேயே ஒருவன் ஈடுபட்டி ருக்க முடியுமோ? என்ற ஐயப்பாடு சிலருக்குத் தோன்றலாம். அவ்வாறு இருக்க முடியாது என்பதில்லை, இருக்கலாம். ஆனால் ஒரு வினாடி கூட இறைவனுடன் ஐக்கியப்பட்டிருக்கச் சக்தியற்ற நாம் எவ்வாறு நாள் முழுவதும் இருக்க முடியும்? அதனால் நாள் தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை அதற்கென்று ஒதுக்கிவைத்து அந்த நேரத்திலாவது உலகை மறந்து ஆண்டவனின்பால் சிந்தனையைச் செலுத்த நாம் முயலவேண்டும்.

''காலையில் வழிபாட்டுடன் நாளைத் தொடங்குங்கள். மனப் பூர்வமாக வழிபடுங்கள். மாலை வரை உங்கள் உள்ளத்தில் அவ் வொளி சுடர்விட்டுக் கொண்டிருக்கும், மாலையிலும் வழிபடுங்கள், இரவு அமைதியான தூக்கம் அதனுல் கிட்டும். வழிபடும் முறை எப்படி இருக்கவேண்டுமென்று கவலைப்படாதீர்கள் எம்முறையில் சிவனையா, இராமனையா, முருகனையா, அல்லாவையா, ஏசுவையா அல்லது வேறு யாரை வழிபடுவது என்ற கவலையும் வேண்டாம். யாரை இறைவனுகக் கருதி வழிபட்டாலும் சரி அவனிடம் உள்ளம் ஐக்கியப்பட்டால் போதும் மனதை அலைய விடாது கட்டுப்படுத் துங்கள், வழிபாட்டின் பயனை அடைவீர்கள்''

காந்தியடிகளார் இறை வழிபாட்டை உயிரினும் மேலாகக் கருதினர். உயிரும் உடலும் இணைந்தது மனிதன். உயிரில்லாத உடல் மனிதனுகாது; உடலற்ற உயிரும் மனிதனுகாது. மனிதன் மனிதனுக வாழவேண்டுமென்ருல் உயிரையும் உடலையும் ஓம்ப வேண்டும். உடலை மட்டும் வளர்ப்பதற்கு ஆறு அறிவு தேவை யில்லை. ஓரறிவு முதல் ஐந்து அறிவுடைய உயிரினங்கள் அனைத் தும் ஆருவது அறிவின்றியே தன் உடலை ஓம்பி வாழ்கின்றன. கல்வி அறிவு பெற்ற மனிதர் தம் அறிவை உடலை வளர்ப்பதற்கு மட்டுமே பயன்படுத்துவாராகில் அவர்களும் மிருகங்களுக்கே ஒப்பாவர். உடலுக்கு அழிவு உண்டு. உயிருக்கு அழிவில்லை. உடல் அழிந்து மண்ணேடு மண்ணுவதை நாம் காண்கின்ருேம். உயிர் அழியாது மறைந்து விடுகின்றது. மீண்டும் பிறவியெடுத்து உடலுடன் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றது. உயிர் இவ்வாறு மீண்டும் மீண்டும் பிறவி யெடுப்பதை ஒழித்து நிலையான பேரின்பம் பெறவேண்டாமா? அதற்கு வழிகாண வேண்டியது நமது கடமையல்லவா? ஒருவன் கற்ற கல்வி அறிவு இதற்குப் பயன்படவில்லையென்ருல் அக் கல்வியினுல் என்ன பயன்?

கல்வி அறிவையும் பகுத்தறிவையும் வயிற்ருக்கு மட்டும் பயன் படுத்துவதின் பயனே அணுக்குண்டுகளின் தோற்றமாகும். கல்வி அறிவைத் தன் வயிற்றினுடன் உயிர் நன்மைக்கும் பயன்படுத்து

வோர் இத்தகைய தீய சக்திகளைப் படைக்கமாட்டார்கள். மனித இனத்தின் இன்ப வாழ்விற்கு ஏற்ற பொருள்களையே ஆக்குவர். கல்வி அறிவு ஒருவன் உள்ளத்தை வளர்க்கவேண்டும். அது அவன் உயிருக்குப் பேரின்பத்தைத் தேடிக் கொடுக்கும். இதைச் செய்ய இயலாதவன் கற்றதனுல் என்ன பயன்?

இறை வழிபாடு உயிருக்குப் பேரின்பத்தைத் தேடித் தரும். கற்றதின் பயன் இதைச் செய்தலே யாகும். அதனுலன்ரே அறிஞர் காந்தியார் உண்ணுதிருப்பினும் இருப்பேன், இறைவனை எண்ணுது இருக்க இயலாது என்ருர்.

"உண்ணு திருப்பினும் உய்யலாம் உய்யோமே
எண்ணுது இறைவனை என்றதேன் — அண்ணலார்
கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவான்
நற்ருள் தொழாஅ ரெனின்."

"மதுரைக்குமரன்"

---

மதிப்புரை :

[நமச்சிவாயா வாழ்க.
கிடைக்குமிடம் : திருவாவடுதுறை ஆதீனம்]

திருஐந்தெழுத்தின் பெருமையினை விளக்கி அருள்கூட்டி ஆட்கொண்டருளும் ஆண்டவனின் கருணையை இனிய எளிய இன் தமிழில் விளக்குவதே இச் சிறு நூலாகும். தேனுய், இன்ன முதாய், தீங்கரும்பாய்த் தித்தித்திக்கும் இந்நூலின் இனிமையை யாவரும் படித்தின்புற வேண்டும்.

பொறுப்பாசிரியர்.

மதிப்புரை :

[தமிழவேள் உமாமகேசுவரனர் (வளவன் வெளியீடு)
கிடைக்குமிடம் : மீனட்சி புத்தக நிலையம்
60, மேலக்கோபுரத்தெரு, மதுரை-1.
(பக்கங்கள் 200) விலை. 2-50]

தமிழுக்குத் தொண்டுசெய்த தகைசான்ற பெரியோர்களில் தமிழவேள் உமாமகேசுவரனரும் ஒருவராவர். ஆங்கிலப் பேரறிஞன் ஜான்சனுக்கு ஒரு 'பாஸ்வெல்' கிடைத்தான். ஆகவே ஆங்கில இலக்கிய உலகத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. அதுபோன்று தமிழிலும் உண்மை வரலாறுகள் தோன்றவில்லை என்ற குறை இருந்து வந்தது, அக்குறையை இதன் ஆசிரியர் ச. சாம்பசிவன் அவர்கள் நிறைவு செய்கிறர். பேரறிஞர்களின் வாழ்க்கையை எழுதும்போது அப்படியே குணம் நாடிக் குற்றமும் நாடி எழுதினல் தான் அது உண்மை வரலாருகும். அதற்கு மாருக வருபவை ஏதோ புகழ்சிக்குரியதாகக் கருதப்படும். இந்நூலாசிரியர் அதனை அறிந்து தெளிந்து பல நூல்கள் எழுதியிருப்பதால் அவ்வரிசையில் இதனையும் எழுதியிருக்கிறர். வாழ்க்கை வரலாற்று நூலை எழுதுபவர்கள் இந்த நூலை முதல் நூலாகக் கொண்டு எழுதுவதற்கு இதன் ஆசிரியர் நூலைப் பல பகுப்புக்களாகப் பிரித்து எழுதிச் சென்றிருப்பது பாராட்டற்பாலது. முத்துக்கள் இடையில் மாணிக்கமாக இந் நூல் இலங்குகிறது. படித்துப்பாருங்கள்.

---

[திருவேகம்ப முடையார் திருவந்தாதி (பொழிப்புரையுடன்)
கிடைக்குமிடம் : ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம்
திருவிடைமருதூர், பக்கங்கள் 80]

பட்டினத்துப்பிள்ளையார் அருளிய இவ் வந்தாதி நூல் பதினெராம் திருமுறையுள் உள்ள நாற்பது பிரபந்தங்களில் ஒன்ருகும். ஒரு பாடலின் அந்தம் மற்றெரு பாடலின் ஆதியாக வரும்படி சொல்லையோ, எழுத்தையோ, சீரையோ, அடியையோ வைத்துப் பாடுவதே அந்தாதியாகும். இவ் வந்தாதி கட்டளைக் கலித்துறையால் நூறு பாடல்களைக் கொண்டது.

கச்சியில் குடிகொண்ட ஓதற்கரிய வேதவிழுப் பொருளாய் இலங்குகின்ற ஏகப்ப நாதனின் பெருமையை இந்நூல் பேசுகிறது. இறைவனுடைய அலகிலா விளையாட்டுக்கள் பலவும் பற்பல பாடல்களில் நிறைந்து இந்நூல் இலங்குகிறது. இதற்குப் பொன். சுப்பிரமணியபிள்ளை அவர்கள் பொழிப்புரையும், உரைக்குறிப்பும், இலக்கண விளக்கமும் செய்துள்ளார். எளிமையும் இனிமையும் நிறைந்து கனிச்சுவைபோல் கருத்தைக் கவருகிறது.

படித்துப் பாருங்கள்.

பொறுப்பாசிரியர்.

## மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

### I. சங்க வெளியீடு

| | | | ரூ. | அ. | |
|---|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | — | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | — | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம் பாகம் | — | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) | — | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக் கலம்பகம் | — | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடை வெண்பா | — | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | — | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம் | — | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (தொகுப்பு) | — | 0 | 4 | 0 |

### II. செந்தமிழ் வெளியீடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) | — | 0 | 4 | 0 |
| 2. | கனாநூல் (5) இனியது நாற்பது (உரை) | — | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | — | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | — | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 9. | அநுமான விளக்கம் | — | 0 | 10 | 0 |
| 10. | அட்டாக யோகக்குறள் | — | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் | — | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | — | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் | — | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | — | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை | — | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப் பொருட்பட்டம் | — | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | — | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பக மூலமும் உரையும் | — | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா | — | 0 | 8 | 0 |
| 24. | குருமொழி வினா விடை | — | 0 | 1 | 0 |
| 25. | கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை | — | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகை திருவிருத்தம் | — | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை | — | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக் கட்டளை | — | 0 | 3 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் | — | 0 | 8 | 0 |
| 33. | உவமான சங்கிரகம் | — | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | — | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை | — | 0 | 2 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் | — | 0 | 8 |
| 41. | பொருட்டொகை நிகண்டு | — | 0 | 6 |
| 42. | அகராதி நிகண்டு | — | 0 | 12 |
| 43. | மேகவிடு தூது | — | 0 | 2 |
| 44. | திருக்குற்றாலமாலை | — | 0 | 2 |
| 45. | தண்டலையார் சதகம் | — | 0 | 4 |
| 46. | இராமோதந்தம் | — | 0 | 3 |
| 47. | பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100) | | 1 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் | — | 0 | 6 |
| 49. | கூடற்புராணம் | — | 0 | 10 |
| 50. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) | — | 0 | 6 |
| 51. | அரும்பொருள் விளக்க நிகண்டு | — | 1 | 4 |
| 52. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | — | 0 | 12 |
| 53. | பாப்பாவினம் | — | 0 | 10 |
| 54. | மதுரை மும்மணிக்கோவை | — | 0 | 5 |
| 55. | பழனிப் பிள்ளைத்தமிழ் | — | 0 | 3 |
| 56. | கடம்பர் கோயில் உலா | — | 0 | 6 |
| 57. | சங்கரநயினார்கோயில் அந்தாதி | — | 0 | 6 |
| 58. | கலைசைக்கோவை | — | 0 | 12 |
| 59. | பெருந்தொகை | — | 5 | 0 |
| 60. | சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை | — | 0 | 5 |
| 61. | சிராமலைக்கோவை | — | 0 | 12 |
| 62. | மத்யவியாயோகம் | — | 0 | 2 |
| 63. | அமிர்தரஞ்ஜனி | — | 0 | 2 |
| 64. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் | — | 0 | 8 |
| 65. | திருச்சிறுபுலியூருலா | — | 0 | 12 |
| 66. | துணைத்தலைவர் நினைவுமலர் | — | 0 | 10 |
| 67. | மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் | — | 2 | 0 |

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4 - 50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 59 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7. 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்பு புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 8 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

---

இவ்விதம், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.